முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
இராணிப்பேட்டை.

**முன்னிலை : திரு.M. செல்வம், M.L.,**
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

2024ம் வருடம் டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அ.வ.எண்.62/2018**
**(CNR No.TNRP010003732018)**

(முதலில் வேலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.188/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது)

M. சுதாகரன், வயது 52, த/பெ.N. மணி, வசிக்கும் இடம் எண்.77/43, ஜீவானந்தம் தெரு, ஆற்காடு நகரம் மற்றும் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். ... வாதி

/எதிர்/

1. V. மும்தாஜ் பேகம் (இறந்துவிட்டார்)

*2. V. ஆரிப் ஹகமத், த/பெ. V. மன்சூர் ஹகமத்,

*3. V. அப்ரார் ஹகமத், த/பெ. மன்சூர் ஹகமத்,

*4. V. சுமையாள், த/பெ. மன்சூர் ஹகமத்,

*5. V. நூருன்னிசா, த/பெ. மன்சூர் ஹகமத்,

அனைவரும் வசிக்கும் இடம் எண்.29/14, உஸ்மான்பேட் 2வது தெரு, மேல்விஷாரம், வாலாஜா தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம்.

*(2 to 5 defendants are impleaded as per order in I.A.No.4/2021, dt.21.06.2022 and Amended as per order in I.A.No.6/2022, dt.02.08.2022)

...பிரதிவாதிகள்.

பிரதிவாதிகள், கிரைய பாக்கி தொகை ரூ.4,00,000/–யை பெற்றுக்கொண்டு, வாதியின் பெயருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க கோரியும் அல்லது மாற்று பரிகாரமாக வட்டியுடன் கூடிய கிரைய ஒப்பந்த முன்தொகை ரூ.40,15,500/– ஐ பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 18% ஆண்டு வட்டியுடன் செலுத்த கோரியும், பிரதிவாதிகள் கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க தவறும் பட்சத்தில், நீதிமன்றத்தின் மூலம் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து, தாவா சொத்தை ஒப்படைக்க கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் : 08.10.2018.

(Before the Hon'ble PDJ, Vellore)

தாவா கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 09.10.2018.

(Before the Hon'ble PDJ, Vellore)

தாவா மதிப்பு ரூ.34,00,000/– + ரூ.1,000/– வாதி நீதிமன்ற கட்டணமாக ரூ.1,02,000/– + ரூ.30/– U/s 42(a) மற்றும் 27(c) ன் படியும் மாற்று பரிகாரமாக கிரைய ஒப்பந்த தொகை ரூ.41,95,500/– க்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.1,25,865/– U/s 22ன் படி செலுத்தியுள்ளார்.

இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் 20.07.2016 மற்றும் 13.03.2018ஆம் தேதி மேல்விஷாரம், வாலாஜா தாலுக்கா, வேலூர் மாவட்டத்தில் ஏற்பட்டது.

இந்த வழக்கு 16.12.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்து, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.P.சம்பத்குமார், அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் திரு.எ.குத்புதீன், அவர்கள் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்து, வழக்கு நிலுவையின் போது 1ம் பிரதிவாதி இறந்த நிலையில், 2 முதல் 5 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக சேர்க்கப்பட்டு, 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்பாணை**

1. 20.07.2016ஆம் தேதி வாதிக்கு, 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.1ன் படி 2 முதல் 5 பிரதிவாதிகள் பாக்கி கிரைய தொகை ரூ.4,00,000/– யை இன்றிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் பெற்றுக்கொண்டு வழக்கு சொத்தினை 2 முதல் 5 பிரதிவாதிகள், வாதி பெயருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டும் என்று ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் வழங்கியும்,

2. தவறும் பட்சத்தில் வாதி, பாக்கி கிரைய தொகை ரூ.4,00,000/- யை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்து, நீதிமன்றமே வாதியின் செலவில், வாதியின் பெயரில் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து வழக்கு சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. மாற்று பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

4. 2 முதல் 5 பிரதிவாதிகள், வாதிக்கு வழக்கு செலவுத்தொகையாக ரூ.1,52,614.00 செலுத்தவேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

## SCHEDULE OF PROPERTY

வேலூர் மாவட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம், ஆற்காடு சார்பதிவை சார்ந்த வாலாஜா வட்டம், மேல்விஷாரம் கிராமத்தில் வரும் நத்தம் சர்வே எண்.272/1B/1ல் உஸ்மான்பேட்டை 2வது வீதியில் பழைய கதவு எண்.15 புதிய கதவு எண்.31 உள்ள A.C.C. ஷீட் போட்ட கூரை வீடும் அடிமனையும் சேர்த்து ஜெக்பந்தி மற்றும் அளவு விவரம்:- மேற்படி வீதியில் வீதிக்கு வடக்கு அப்துல் ரஹமான் சாயபு காலி மனைக்கும் நஜ்முன்னிசா வீட்டு புழக்கடைக்கும் தெற்கு, கதவு எண்.14 வீட்டிற்கு கிழக்கு, கதவு எண்.16 வீட்டிற்கு மேற்கு, இதன் மத்தியில் கிழக்கு மேற்கு தெருபுறம் 23 அடி, புழக்கடை பக்கம் 22 1/2அடி, வடக்கு தெற்கு 84 அடி ஆக மொத்தம் 1911 சதுரடி அளவுள்ள அடிமனையும்

இதில் கட்டியுள்ள A.C.C. ஷீட் போட்ட கூரை வீடும் இதன் சகல கட்டுகோப்பு சாமான்கள் கதவு வாசக்கால்கள் ஜன்னல்கள் மேல் சாயா அடி நிவேசம் உள்படவும் மேற்படி வீட்டில் அமைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு குழாய் இணைப்பு இவைகளின் டெபாசிட் உட்பட.

2024ம் வருடம் டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

M SELVAM I Additional District Judge, Ranipet Digitally signed by M SELVAM

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு . கூ . பொ)
இராணிப்பேட்டை.

<u>செலவு விவரம்</u>

| | வாதி தரப்பு |
|---|---|
| Stamp for Plaint | Rs. 1,25,865.00 |
| Stamp for Power | Rs. 10.00 |
| Pleaders fee (Senior) (as prayed)<br>(Junior) (as prayed) | Rs. 20,000.00<br>Rs. 6,500.00 |
| Service of Process | Rs. 29.00 |
| Preparation of process | Rs. 10.00 |
| Cost of pre-suit notice | Rs. 100.00 |
| Cost of Marking or Getting copies of documents such as affidavit etc. | Rs. 100.00 |
| TOTAL | Rs. 1,52,614.00 |

M SELVAM I Additional District Judge, Ranipet Digitally signed by M SELVAM

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு . கூ . பொ)
இராணிப்பேட்டை.